# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2015 ஜூன் ~ ஜூலை ~ ஆகஸ்ட் வெளியீடு



இயேசு அவர்களை நோக்கி:
என் பின்னே வாருங்கள், உங்களை
மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.
மாற்கு 1:17

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகளடங்கிய,
ஆவிக்குரிய வாழ்வில்
வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய
**ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில்
நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.
இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள்
ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைவதும்
இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக
ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக
ஏற்றுக்கொள்வதுவுமே
எங்களுடைய ஜெபமாயுள்ளது. கிறிஸ்தவ
ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச
சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள்
பெற்றுக்கொள்ள விரும்பினால்
கடைசி பக்கத்திலுள்ள கூப்பனை பூர்த்தி
செய்து கீழ்வரும்
முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.


**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி,**
**வெள்ளவத்தை, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# உபயோகமாய் மாறு

**நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள். யோவேல் 2:13.**

ஆதியாகமம் 3ன் படி மனிதன் இழந்ததற்கு மேலாகவே தேவன் மனிதனுக்குக் கொடுத்து கொண்டு வருகிறார். இழப்பைத் திருப்பித்தருகின்ற வேலையையும் அதற்குரிய வல்லமையையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து தேவன் துவக்கினார். கல்வாரியின் பலியினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடியே, தேவனுடைய கிருபையினாலும், உதவியினாலும் ஒவ்வொரு பாவிக்கும் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஏற்பட்டுள்ள ஒவ்வொரு இழப்பையும் சரிக்கட்ட முடியும். நீ தேவனுக்கு எவ்விதத்திலாவது உபயோகமுள்ளவனாக இருக்கிறாயா? உன் வாழ்க்கையில் கொஞ்சப் பகுதியையாவது தேவன் உபயோகித்திருக்கிறார் என்று உறுதியாகவும் நாணயமாகவும் உண்மையாகவும் உன்னால் கூறமுடிமா?

உன்னுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்படவேண்டுமென்று விருப்பமும் வாஞ்சையுமுள்ளவனாக இவ்வுலகிற்கு வந்து மரித்து உயிரோடு எழுந்தார். சென்று போன வருஷங்களில் எல்லாம் நாம் நமது வாழ்க்கையைப் பாழாக்கிவிட்ட போதிலும். இப்பொழுது நாம் தேவனுடைய உடன் ஊழியக்காரராக மாறக்கூடும் (கொரி. 3:9 )

உனது பாவங்களினால் ஏற்பட்ட ஒவ்வொரு நஷ்டத்தையும் நீ திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். நீ உனக்கு மட்டுமல்லாது உன் குடும்பத்திற்கும் உன் தேவனின் பரிசுத்த நாமத்திற்கும் நிந்தையும் அவமானத்தையும் சம்பாதித்திருக்கிறாய். உன் பாவங்களின் விளைவாக உன் வாழ்க்கையில் தேவனைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டாய். தேவனுடைய காரியங்களுக்கு நீ முற்றிலும் அந்நியனாக இருக்கிறாய். அவரது சத்தியம் உனக்கு ஒன்றுமே விளங்குவதில்லை. நீ தேவனுக்கு முன்பாக முட்டாளாகவும் பைத்தியக்காரனாகவும் இருக்கிறாய். இவற்றை நீ அறியாதிருக்கிறாய். நீ நம்பிக்கை இல்லாதவனாகவே மரிப்பாய்.

இந்நிலை மாற நீ விரும்புகிறாயா? அப்படியானால் உனக்கு ஒரு நல்ல செய்தியைக் கொடுக்கிறோம்.

கர்த்தராகிய இயேசு கிஸ்துவின் பாதத்தண்டை வா நொறுங்குண்ட நறுங்குண்ட இதயத்துடன் உன் பாவங்களுக்காக மெய் மனஸ்தாபம் அடைந்தவனாக மனந்திரும்புவாய் என்றால் இன்றைக்கே இப்பொழுதே கர்த்தர் உன்னை மன்னித்து மாற்றி அமைப்பார். இவ்வாறு உன்னைத்தேடி இரட்சிக்கவே அவர் இவ்வுலகிற்கு வந்தார்.

அனுதின தேவ இரகசியத்திலிருந்து சகோ. பக்த் சிங்



# நாம் சேவிக்கின்ற தேவன் எப்படிப்பட்டவர்? *அப்போஸ்தலர் 27:23*



"என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவன்"

அவர் சர்வ வல்லமையுடையவர். நாம் காணும், நாம் காண முடியாத அனைத்தையும் சிருஷ்டித்தவர். அவர் என்றுமே இருக்கிறவர். அவர் இல்லாத காலம் இல்லை. அவர் என்றும் எப்போதும் மாறாதவர். நித்தியமானவர், சத்தியமுள்ளவர். அவர் எப்போதும் தாமாகவே செயற்படக்கூடியவர். எல்லாம் அறிந்தவர். அவர் செய்ய நினைப்பது ஒரு போதும் எவராலும், எதனாலும் தடை செய்ய முடியாது. அவருக்கு காலங்கள் இல்லை. தொடக்கமும், முடிவும் இல்லாதவர்.

சர்வ சிருஷ்டி கர்த்தராகிய அவர், அவரால் படைக்கப்பட்ட அனைத்தின் மீதும் முழுமையான அதிகாரமும், ஆளுகையும் உடையவராயிருக்கிறார். அவருடைய சித்தத்தை யாராலும் மாற்ற முடியாது. இவ்வுலகில் இடம்பெறும் எக்காரியத்தையும் கண்டு அவர் ஆச்சரியப்படுகிறவர் அல்லர். இத்தன்மைகளைக் கொண்ட ஒரு மெய்த் தேவனை சத்திய வேதம் நமக்கு வெளிப்படுத்துகின்றபடியால் விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்து இயேசுவின் மீது நாம் வைத்துள்ள நம்பிக்கையில் உறுதியுள்ளவர்களாய் இருப்பதையே தேவன் விரும்புகிறார்.

உலகில் நிகழும் காரியங்களைப் பற்றி நினைக்கும்போது, முதலில் மனிதனை நினைப்பதில் நாம் தொடங்கக்கூடாது. நம் வாழ்க்கையில் புரிந்துகொள்ள கடினமானதும், புதிரானதுமான அநேக காரியங்கள் உள்ளன. ஆனால், தேவன் தாமே அருளிய தம்முடைய வார்த்தையாகிய திருமறையின் மூலமாய்

**தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.**

**யோபு 42: 2**

சர்வ வல்ல தேவன் நமக்கு புதிய அறிவையும், உற்சாகத்தையும் தருகிறார். எனவே, இவ்வுலகில் நிகழ்கின்ற காரியங்களானாலும் சரி, எமது வாழ்க்கையில் நிகழ்கின்ற காரியங்களானாலும் சரி நாம் அதனைப் புரிந்து கொள்ள விரும்பும் போது தேவனைப்பற்றி திருமறை என்ன சொல்லுகிறது என்பதை நாம் கற்றுக் கொள்வதன் மூலம், தொடங்கவேண்டும்.

அவ்வாறு நாம் தொடங்கி செயற்படும் போது மட்டுமே எமது வாழ்வில் நாம் கடந்து செல்லும் மிகவும் கடினமான சூழ்நிலையிலும், தனிமைப்படும் சந்தர்ப்பங்களிலும் நாம் சேவிக்கின்ற ஜீவனுள்ள மெய்த்தேவனின் அன்பையும், இரக்கத்தையும், பாதுகாப்பையும் உணர்ந்தவர்களாய் தேவனுக்காக எச்சூழலிலும் நன்றி சொல்லி வாழ முடியும்.

தேவன் தாமே இத்தியானத்தின் மூலமாய் மகிமைப்படுவதோடு நம் ஒவ்வொருவரையும் பெலப்படுத்தி, சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி நடத்துவாராக! தேவனுக்கு மகிமை உண்டாகட்டும்.

சகோ. சேவியர்
வவுனியா

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

| | | |
|---|---|---|
| மு.ப. | 8.15 | - ஞாயிறு பாடசாலை |
| மு.ப. | 9.30 | - ஆராதனை வேளை |
| பி.ப | 1.30 | - வாலிபர் கூட்டம் |
| பி.ப. | 4.00 | - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி) |
| பி.ப. | 6.00 | - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி) |

**செவ்வாய்க்கிழமை**

| | | |
|---|---|---|
| பி.ப | 6.30 | - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி) |

**புதன் கிழமை**

| | | |
|---|---|---|
| பி.ப | 6.00 | - ஜெபக்கூட்டம் |

**வெள்ளிக்கிழமை**

| | | |
|---|---|---|
| பி.ப | 6.00 | - வேத ஆராய்ச்சி |

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!



# கர்த்தருக்குப்பயப்படுதல்

சகோதரி பெனுவேந்தர் விஜி, வவுனியா



**ஏன் நாம் கர்த்தருக்கு பயப்படவேண்டும்?**

1. சங்கீதம் 130:4 ல் நாம் பார்க்கும்போது உமக்குப் பயப்படும்படி உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி நம்முடைய தேவனாகிய கர்த்தர் மன்னிக்கிற தேவனாக இருக்கிறார். ஏனெனில், நாம் செய்த எண்ணற்ற பாவங்களை அவர் மன்னித்திருக்கிறார். ஆகவே, பாவங்களை மன்னிக்கிற தேவனாகிய அவர் ஒருவருக்கே நாம் பயப்படவேண்டும்.

2. வெளிப்படுத்துதல் 15:4 கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? என்று கூறுகிறது. நம் தேவன் ஒருவரே பரிசுத்தராகவும், எல்லா ஜாதிகளும் தொழுதுகொள்ள பாத்திரராகவும் இருக்கிறார் பரிசுத்தத்தில் அவருக்கு ஒப்பானவர் யாரும் இல்லை. ஆகவே நாம் கர்த்தருக்குப் பயப்படவேண்டும்.

3. 2 கொரிந்தியர் 5:11ல் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்-காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். ஆதலால், ஒவ்வொரு மனிதனும் தன் சரீரத்திற் செய்த சகல செயல்களுக்கும் தக்க பலனை ஒருநாள் அடைய வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறது. அதை நாம் ஒருபோதும் மறைக்க முடியாது. அப்படிப்பட்ட சகல செய்கைக்கும் பலனை அடைவோம் எனும் நியாயத்தீர்ப்பின் நிமித்தம் நாம் கர்த்தருக்குப் பயப்பட வேண்டும்.

**கர்த்தருக்குப் பயப்படுதல் என்றால் என்ன?**

நீதிமொழிகள் 8:13 தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம். தீமை எது என்று நோக்கும்போது கர்த்தர் அருவருக்கின்ற சகல பாவங்களும் தீமையாக இருக்கிறது.

- கண்களால் பார்க்கும் தீய காட்சிகள்
- காதுகளால் கேட்கும் சகல தீய வார்த்தைகள்
- நாவினால் பேசுகின்ற தேவையற்ற வார்த்தைகள்

- மனதால் சிந்திக்கின்ற தீய நினைவுகள்
- உடலால் செய்கின்ற தீய செயல்கள்

போன்ற யாவும் தீமையாக இருக்கிறது. ஆகவே நாம் தீமையை நாம் வெறுக்க வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

### கர்த்தருக்குப் பயப்படுவதால் ஏற்படும் நன்மைகள்

சங்கீதம் 128: 1 - 6

- கர்த்தருக்குப் பயப்படுகிறவன் பாக்கியவான்
- அவனது கையின் பிரயாசங்கள் ஆசீர்வதிக்கப்படும்
- மனைவி, பிளளைகளால் பலனும், ஆறுதலும் உண்டு
- நீடித்த வாழ்வு உண்டாகும்
- கர்த்தர் பரலோகத்திலிருந்து ஆசீர்வதிக்கிறார்

• • • • • • • • • • • • • • • • • • • • • • •

### *நன்மையைக் குறித்து 7 காரியங்கள்*

*1. நன்மைசெய்யப் படியுங்கள்*
*ஏசாயா 1: 17*
*2. கர்த்தரை நம்பி நன்மைசெய்*
*சங்கீதம் 37:3*
*3. நன்மைசெய்தால் மேன்மையுன்டு*
*ஆதியாகமம் 4: 7*
*4. நீதிமான்களுடைய ஆசை நன்மை*
*நீதிமொழிகள் 11: 23*
*5. தீமையை விட்டு விலகி, நன்மை செய்*
*சங்கீதம் 37: 27*
*6. நன்மையை ஜாக்கிரதையுடன் தேடுகிறவன் தயையைப் பெறுவான்*
*நீதிமொழிகள் 11: 27*
*7. கர்த்தர் உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்*
*சங்கீதம் 84.11*

*தொகுப்பு: M. ஜெபத்துரை*

# சாட்சி

**கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன். நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்.**
**சங்கீதம் ௨௨: ௰**

ஆம்! ஹெலன் நிரோஷனியாகிய நான், பாரம்பரிய இந்து பின்னணியில் இருந்து இரட்சிக்கப்பட்ட எனது பெற்றோருக்கு முதல் வாரிசாவேன். திருமணத்தின் பின் வெகுகாலமாய் பிள்ளைகளற்றிருந்த என் பெற்றோரின் ஜெபத்தின் பலனாய் பிறந்த என்னை வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்கு கொண்டுசெல்லும் முன் அவிசாவளை பகுதியிலிருக்கும் A.O.G. சபைக்கு கொண்டு சென்று "சாமுவேலைப் போல இவளை கர்த்தருக்கென்றே ஒப்படைக்கிறோம்" என பொருத்தனை செய்தனர்.

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் எங்களுடைய வீட்டிலேயே சபை கூடப்பட்டு வந்தது. எனது பெற்றோரும் பகுதி நேர ஊழியங்களில் ஈடுபட்டு வந்தனர். கொழும்பிலுள்ள ஒரு மருந்தகத்தில் தொழில் புரிந்து வந்த எனது தகப்பனார் தேவனுடைய அழைப்பின் பேரில் அனைத்தையும் விட்டு, வீட்டை முழுமையாக சபைக்கு ஒப்படைத்துவிட்டு அவிசாவளையில் இருந்து அறிமுகமற்ற பிரதேசமான திருகோணமலைக்கு எம்மையும் அழைத்துக்கொண்டு சென்றார்.

இவ்வாறாக திருகோணமலையில் மிகவும் பின் தங்கிய பகுதியான "கரடிப்பூவல்" என்ற கிராமத்தில் 2002ம் ஆண்டு எம்முடைய ஊழிய வாழ்வை ஆரம்பித்தோம். எனது 10 வயதிலிருந்தே என் தந்தையுடன் சேர்ந்து ஊழியத்துக்கு உதவி வந்தேன். இவ்வாறாக சென்ற எமது வாழ்க்கையில் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியானது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. எம் குடும்பத்தினர் ஐவரின் உயிர் மட்டுமே மீந்த நிலையில் மற்ற அனைத்தையும் இழந்து நிர்க்கதியானோம். ஆனால், இந்த தீமையிலும் ஒரு நன்மையை வைத்திருந்தார் தேவன். இக்கால கட்டத்தில் தான் மெய் சத்தியத்தை நாம் அறிந்து, புதிய ஏற்பாட்டு சபைக்கொள்கையைப் பின்பற்றத் தொடங்கினோம்.

இதன் பின்னரான காலப்பகுதியிலே தான், அங்குமிங்குமாய் இலேசாக நடைபெற்றுக் கொண்டிருந்த உள்நாட்டு யுத்தமானது தாண்டவமாடத் தொடங்கியது. இதுவே எனது வாழ்வில் புதிதானதும் பயங்கரமானதுமான அனுபவமாயிருந்தது. பயம் கொஞ்சம் கொஞ்சமாய் என்னை ஆட்கொள்ளத் தொடங்கியது. துப்பாக்கி சூட்டு சத்தங்கள், ஷெல் சத்தங்கள், யுத்த விமான சத்தங்கள், ஹர்த்தால், ரவுண்டப், அன்பானவர்களின் மறைவு என இதுவே எமது வாழ்வாக மாறியது. சில வேளைகளில் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இரவிரவாக ஓட வேண்டிய நிலை. இவை யாவுமே என்னை விரக்தியடைய செய்தன. எனக்குள்ளாய் ஓர் கசப்பின் வேர் துளிர்விட ஆரம்பித்தது.

இப்படியான ஒரு காலகட்டத்திலே

தான் 2010ம் ஆண்டு மாதம்பை என்ற பகுதியில் CFC சபையினரால் நடத்தப்பட்ட வாலிப முகாமிற்கு சற்றும் விரும்பாத நிலையில் எனது தந்தையின் கட்டாயத்தின் பேரில் கலந்து கொண்டேன். அந்த 3 நாட்கள் கேள்விக்குறியாக இருந்த என் வாழ்க்கையை மாற்றியமைத்தது. அதுவே எனது தனிப்பட்ட இரட்சிப்புக்கும் அதன் பின்னரான என் ஊழியத்திற்கும் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

“துயரப்படுகிறவர்கள்
பாக்கியவான்கள், அவர்கள்
ஆறுதலடைவார்கள்.”
“நீதியினிமித்தம்
துன்பப்படுகிறவர்கள்
பாக்கியவான்கள், பரலோகராஜ்யம்
அவர்களுடையது.”
(மத்தேயு 5: 4, 10)

இந்த வசனங்கள் என்னைத் தொட்டன. கிறிஸ்துவின் அன்பு என்னை முற்றிலுமாய் ஆட்கொள்ளத் தொடங்கியது. எனக்குள் இருந்த காயங்கள், வேதனைகள், கசப்புக்கள் யாவுமே கரைந்து போயின. அன்று உணர்ந்தேன் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்துவிட்டேன் என்பதால் இரட்சிப்படைய முடியாதென்றும் என்னுடைய தனிப்பட்ட பாவங்களை அறிக்கையிட்டு அவைகளை விட்டுவிட வேண்டும் என்றும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை என்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் அன்றைய நாள் எனது இரட்சிப்பின் நாளாய் அமைந்தது.

அத்துடன் அம்முகாமில் நடைபெற்ற ஒரு பாடல் போட்டியில் வெற்றி பெற்றதன் காரணமாக அச்சபையினர் பலரது அறிமுகம் கிடைத்தது. இவை யாவுமே தற்செயலாக நடைபெற்ற நிகழ்வுகள் அல்ல. அனைத்துமே தேவ சித்தத்தின்படி தேவனுடைய அநாதி தீர்மானத்தின் பேரில் நடைபெற்றவை என்பதை நான் முற்றிலுமாய் விசுவாசிக்கிறேன்.

இத்துடன் முடிந்துவிடவில்லை. 21 வருடங்களுக்கு முன் தேவனுக்கென என்னை அர்ப்பணித்ததை என் பெற்றோர் மறந்த போதிலும், தேவன் தம்முடைய வேளையில். உயர்தரப்படிப்பை முடித்து விட்டு, பல்கலைக்கழகத்துக்காய்க் காத்துக்கொண்டிருந்த என்னோடு இடைப்பட்டார். எரேமியா 1: 5ன் படியே தம்முடைய ஊழியத்திற்கென என்னை அழைத்தார். இன்று, கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்திலே முழு நேர ஊழியத்தை செய்வதற்கு அடியாளுக்கு அளித்த தயவை எண்ணித் துதிக்கிறேன்.

கர்த்தரிடத்தில்
ஒன்றை நான் கேட்டேன்,
அதையே நாடுவேன்,
நான் கர்த்தருடைய மகிமையைப்-
பார்க்கும்படியாகவும்,
அவருடைய ஆலயத்தில்
ஆராய்ச்சி செய்யும்படியாகவும்,
நான் என் ஜீவனுள்ள
நாளெல்லாம் கர்த்தருடைய
ஆலயத்தில் தங்கியிருப்பதையே
நாடுவேன்.
சங்கீதம் 27: 4



# லேகியோன் குணமடைதல்



மாற்கு 5: 1 - 20

அறிமுகம்

- பிசாசினால் பீடிக்கப்பட்ட ஒருவன், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைச் சந்திப்பதால் குணமடைந்து வாழ்க்கை மாற்றப்படும் கதையே இப்பகுதியில் சொல்லப்படுகிறது.
- உண்மையான வாழ்க்கை மாற்றம் ஏற்படுவது ஒருவன் ஆண்டராகிய இயேசு கிறிஸ்துவை சந்திக்கும் போது மட்டுமே
- வேறொன்றாலும் வாழ்க்கை மாற்றத்தைக் கொண்டு வர முடியாது. 2 கொரிந்தியர் 5: 17
- உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை விரும்புகிறீர்களென்றால் நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைச் சந்திக்க வேண்டும்.
- இம்மனிதன் குணமடைவதற்கு முன் இவனைப்பற்றி சொல்லப்பட்டுள்ள விபரங்கள் ஆவிக்குரிய ரீதியில் ஆராயப்படும் போது அவை, பாவத்திலிருக்கும் ஒருவனின் நிலையையே குறிக்கின்றன. அதே போல, குணமடைந்ததற்கு பின்னதான குணாதிசயங்கள், கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஓர் விசுவாசியின் குணங்களைக் குறிக்கின்றன.

**வேதனைப்படுத்தப்பட்ட மனிதன்**

1. கல்லறை வாசி - 3ம் வசனம். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது. அவன் கல்லறையிலிருந்ததில் இருந்து நாம் அவனுடைய பின்வரும் நிலைமைகளை அறிந்து கொள்ளலாம்

**இறந்த நிலை**

*அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். எபேசியர் 2:1*

*பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். ரோமர் 6:23.*

கல்லறை இறப்புடன் தொடர்புபட்டது. அது நாம் ஆவியில் மரித்திருந்த நமது கடந்தகால நிலையை உணர்த்துகிறது. கிறிஸ்து இல்லாத ஒவ்வொருவனும் இறந்தவனே. கர்த்தர் இயேசுவை அறியாத யாவரின் நிலையும் இதுதான். அவர்கள் உடல் உயிரோடு இருந்தாலும் ஆவியில் மரித்தவர்களாகவே இருக்கின்றனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிர்த்தெழச் செய்த தேவனுடைய ஆவியானவர் நம் ஆவியை உயிர்ப்பிக்கும் போதே நம் ஆவி உயிருள்ளதாகிறது.

## மறைவான நிலை

*மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். மத்தேயு 23:27*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசேயர் என்றதோர் மக்கள் குழவினரை “வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்” என அழைத்தார். அவர்களின் வெளித்தோற்றம் நன்றாகவே இருந்தது. ஆனால், உள்ளே அவர்கள் மாய்மாலம் நிறைந்தவர்களாயிருந்தார்கள். இரட்சிக்கப்படாத அனைவரின் நிலையும் இதுவே. தாங்கள் நல்லவர்கள், நல்ல மதப்பற்றுள்வர்கள் என காட்டிக்கொள்வதற்காக நல்லதோர் வெளித்தோற்றத்தைக் காண்பிப்பார்கள். ஆனால் அவர்களுக்குள் பாவம் இருக்கும். இரட்டை வாழ்க்கை வாழ்வார்கள். தங்கள் பாவத்தை எவரும் ஏற்றுக்கொள்ளாமல் மதம் சார் வெளித்தோற்றத்தால் அதை மூடி விடுவார்கள். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து ஆனால் அதின் பலனை மறுதலிக்கிறவர்களாய் இருப்பார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே நம் இருதயத்தைச் சுத்திகரித்து அதை சுத்தமுள்ளதாக்க முடியும்.

## வெறுக்கப்படும் நிலை

*அவள் அதைக் கேட்டவுடனே, சீக்கிரமாய் எழுந்து, அவரிடத்தில் வந்தாள். யோவான் 11: 29*

லாசரு என்பவனின் கல்லறையை திறக்கும் படி ஆண்டவர் இயேசு சொன்ன போது ஜனங்கள் அதை விரும்பாமல் “அது நாறுமே” என்று சொல்லி அதை வெறுத்தார்கள். அப்படியே பாவத்திலிருக்கும் ஒவ்வொரு மனிதனும் இருக்கின்றான். சூழவுள்ளோர்களின் நிலையும் இதுவே ஆயினும் அவர்களால் வெறுக்கப்பட்டவர்களாகவே காணப்படுவார்கள். பாவம் நாறும், வெறுக்கத்தக்கது.

## பிரிக்கப்பட்ட நிலை

*உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. ஏசாயா 59:2*

நாம் ஒருவரை எந்தளவு நேசித்தாலும், அவர் இறந்த பின், அவரைக் கல்லறையில் விட்டுவிட்டு அவர்களை விட்டு பிரிந்தே வீடு திரும்ப வேண்டும். அது போலவே பாவமும். மனிதனுக்கும் தேவனுக்கும் இடையேயும் மனிதர்

ஒவ்வொருவரிடமும் பாவம் பிரவினையைக் கொண்டு வருகிறது. ஆண்டவர் இயேசுவின் சிலுவை ஒன்று தான் நம்மை மறுபடியும் தேவனுடனும் மற்ற-வர்களுடனும் ஒப்புரவாக்குகிறது. சிலுவையின் நிலைக்குத்துப் பலகை, பாவ மனிதனை பரிசுத்த தேவனுடனும், கிடையான பலகை மனிதர்களிடையேயும் ஒப்புரவாக்கத்தை ஏற்படுத்துகிறது.

### பேய்த்தன்மையான நிலை

*அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது. அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. மாற்கு 5: 2, 3*

கல்லறை, மண்டையோடு, எலும்புகள் போன்றவை எப்போதும் பேய்த்-தனத்துடன் தொடர்பானவை. அதாவது, பாவத்திலிருக்கும் ஒவ்வொருவ-னும் சாத்தானின் அதிகாரத்திற்கு கீழாகவே இருக்கிறான் என்பதை இது ஞாபகப்படுத்துகிறது. அப்போஸ்தலர் 26:18. பாவத்திலிருப்போரின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துபவன் சாத்தானே. ஆனால், கர்த்தர் இயேசு நம்மை விடுதலையா-க்கும் போது நாம் உண்மையாகவே விடுதலையடைந்து கர்த்தர் இயேசுவின் அதிகாரத்துக்குள் வருகிறோம். அப்போது நாம், தேவன் விரும்புகிறவற்றை-யே செய்கிறவர்களாயிருப்போம்.

### உக்கிச் சிதைந்துபோகும் நிலை

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3: 16*

கல்லறையில் வைக்கப்பட்டதன் பின்னர், உடல் உக்கிச்சிதைந்து அழிந்து போகும். அப்படியே, ஆண்டவர் இயேசுவில் விசுவாசமில்லாமல் பாவத்தில் இருக்கும் ஒவ்வொருவனும் இருக்கிறான். நித்திய நரக அக்கினியிலே அவர்கள் அழிந்து போவார்கள். பாவம் இறுதியில் அழிவைக்கொண்டுவரும். ஆனால், நாம் ஆண்டவர் இயேசுவை விசுவாசித்து பாவ மன்னிப்பைப் பெற்றுக்-கொள்ளும் போது, நாம் நித்தியஜீவனை அடைந்து, அவரை என்றென்றும் ஆராதித்து, ஊழியஞ்செய்து அவர் சமுகத்தை அனுபவிப்போம்.

*-சகோ. தினேஷ்-*



# பராக்கிரமசாலிகள் *சகோ. நெவில்*

1 நாளாகமம் 7: 2, 5, 7, 9, 11, 40

இவ்வசனத்தில் சில மனிதர்களைக்குறித்து பராக்கிரமசாலிகள் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் மக்கள் மத்தியிலே குறிப்பிடத்தக்க சிலர் இருந்திருக்கிறார்கள், அவர்கள் பராக்கிரமசாலிகளாயிருந்தார்கள். நாளாகமப் புத்தகத்தின் முதல் சில அதிகாரங்களிலே நீண்ட பெயர்பட்டியல் நம்மை சோர்வடைய செய்ய அல்ல.

தேவன் விரும்புகிறார் நாமும் இப்படிப்பட்ட பராக்கிரமசாலிகளாய் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். இங்கே குறிப்பிடப்பட்டிருப்பவர்களுக்கு இருந்ததோ சரீர பலம், புய பலம். ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் வாழும் விசுவாசிகளாகிய நம்மிடம் தேவன் எதிர்பார்ப்பதோ நம் உடல் பலத்தையல்ல நமது ஆவிக்குரிய பலத்தையே. இப்பட்டியலில் இருக்கும் இவர்களைக்குறித்து இவர்கள் பராக்கிரமசாலிகள் என எழுதப்படுவது உகந்தது என தேவன் விரும்பினார். இந்த சபை யுகத்திலும் இப்படிப்பட்ட பராக்கிரமசாலிகள் அநேகர் இருந்திருக்கிறார்கள். நாமும் இவர்களைப்போல பராக்கிரமசாலிகளாயிருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை நண்பர்களே!

நமது ஆவிக்குரிய பலத்தைப்பற்றி, நமது ஆவிக்குரிய வாழ்வைப்பற்றி பிற்காலத்திலே என்ன எழுதப்படும்?

இந்த மனிதர்கள் பராக்கிரமசாலிகளாயிருந்தார்கள்.

நம் வாழ்வின் நோக்கம் அர்த்தம் என்ன? இவ்வுலகத்தை விட்டு நாம் நீங்கும் நாளிலே இவ்வுலகத்தில் நாம் ஒரு அடித்தடயத்தை வைத்துப்போக வேண்டும். அல்லவெனில் நாம் வாழும் வாழ்க்கைக்கு எந்தவொரு அர்த்தமும் இல்லாது போய்விடும். ஆகவே தயவு செய்து இந்த சவாலை ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் தேவனுடைய பராக்கிரமசாலியாயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

**கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். எபேசியர் 6: 10**

இது தான் ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசிக்குமான அழைப்பு. சிலர் இந்த அழைப்பைக்கேட்டு நல்ல பதிலைக் காண்பித்தார்கள். அவர்கள் பராக்கிரமசாலிகளானார்கள். இதுவரை நீங்கள் இதைப்பற்றி சிந்தித்துப்பார்த்ததில்லையென்றால் இன்று சிந்தித்துப்பாருங்கள். அப்படியெனில் தேவனைப் பொருத்தமட்டில் நீங்கள் தேவனுடைய பராக்கிரமசாலியாயிருக்க வேண்டியதாயிருக்கிறது. கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். இதை நாம் எப்படி செய்யலாம்?

இதைக்குறித்து பவுல் அப்போஸ்தலன் 1 தீமோ 4: 7,8ல் இப்படியாக சொல்கிறான்:

சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாய் இருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு. சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது, தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது.

தேவ பக்திக்கேதுவாக முயற்சி

பண்ணு. நகர்ப்புற பகுதியில் வசிக்கிறவர்கள் தங்கள் உடல் ஆரோக்கியத்தை குறித்ததான அதிக ஆர்வத்தினாலே GYM போகும் பழக்கமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இதற்காக அதிகமாய் பிரயாசப்படுகிறார்கள். பவுல் அப்போஸ்தலனோ இது அற்ப பிரயோஜனமுள்ளது என்கிறார்.

சரீரமுயற்சி அற்ப பிரயோஜனம் உள்ளது எனச்சொல்லி மேலும், தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு எனச்சொல்கிறார். இவ்வசனத்தில் இதன் எதிர்ப்பக்கமும் எழுதப்பட்டிருக்கிறது. தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு என்று வெறுமனே சொல்லாமல் சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, எனச்சொல்லி அதற்கு பதிலாக தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு என்றே சொல்கிறார். சீர்கேடான பேச்சுக்கள் நம்முடைய ஆவிக்குரிய சாற்றை இல்லாது செய்துவிடும்.

விசுவாசிகள் நாம் ஒன்று கூடி கதைக்கும் போது ஒவ்வொருவருடைய தேவையில்லாத கதைகளையே கதைக்கிறோம். பவுலின் காலத்திலும் இப்படிப்பட்ட பிரச்சினை இருந்தது. இதற்கு அவன் சீர்கேடான கிழவிகள் பேச்சு என்று சொல்கிறார். ஆகவே இவற்றை தவிர்த்துக்கொள்வதற்கு கூடுமான வரை முயற்சி செய்யுங்கள். ஏனெனில் இவை எவ்விதத்திலும் நமக்கு பிரயோஜனமாய் அமையாது. நமக்கு உதவுவது என்னவென்றால் தேவ பக்திக்கேதுவான பயிற்சியே. அப்படியென்றால் இப்படிப்பட்ட தேவ பக்திக்கேதுவான பயிற்சிகளில் நாம் ஈடுபட வேண்டும். இப்படிப்பட்ட பயிற்சிகள் எவை என்பது நம் எல்லாருக்கும் நன்கு தெரிந்த போதிலும் இவற்றை நாம் செய்யாதிருப்பதே நமக்கிருக்கும் பிரச்சினையாகும். செய்ய வேண்டியது என்ன என்று நமக்கு தெரியும் ஆனால் நாம் செய்வதில்லை. அவை எவை? வேத வசனத்தை அன்றாடம் வாசித்தல் எனும் பயிற்சி. வேதம் வாசிக்கப்பட வேண்டும் என்று நாம் அறிவோம். ஆனால் நாம் வாசிப்பதில்லை.

**இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.**
**1 பேதுரு 2: 1 ~ 3**

நீங்கள் வேதத்தை அன்றாடம் வாசிக்கிறீர்களா?

இந்த பயிற்சி இல்லாது போனால் நமது ஆவிக்குரிய வாழ்வு வடிவம் இழந்து போகும். ஆகவே, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள். இதை செய்வீர்களா? இதை செய்ய தீர்மானிப்பீர்களா? உங்கள் பிள்ளைகளுக்கும் இதைச்செய்யக் கற்றுக்கொடுப்பீர்களா? இப்படி செய்வோமென்றால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை சீக்கிரமாய் வளர ஆரம்பிக்கும். நாமும் அந்த பராக்கிரமசாலிகளைப் போலாவோம்.

நாம் செய்ய வேண்டிய பயிற்சியின் பட்டியலின் மிகுதியும் இதனுடன் தொடரப்போகிறது. அவையான, ஜெபம், ஐக்கியம், அப்பம் பிட்குதல், சாட்சி பகிர்தல் என்பவை.

ஆகவே, இன்றிலிருந்து நாம் வேதத்தை வாசிப்போம். ஒவ்வொரு நாளும் வாசிப்போம்.

# மேரி ஜோன்ஸ்

“மேரி, மேரி!” ஆத்திரத்தால் மோலி ஜோன்ஸ் குரல் நிரம்பியிருந்தது. “எங்கே அவள், வழக்கமாக இந்நேரத்துக்கு தனது வேலைகளை முடித்திருப்-பாளே? மேரி...”

தாயின் குரல் ஆறு வயதான மேரி ஜோன்சின் பகல் கனவைத் தடுத்தது. அவள் வேலைகளை நினைத்தாள். அவற்றை முடிப்பதற்காக அவள் வீட்டுக்குள் ஓடும் போது சூரியன் அடிவானில் மறைந்து கொண்டிருந்தது.

“அம்மா, நான் என் வேலைகளை மறந்து விட்டேன். மன்னித்து விடுங்கள். இப்போதே அவற்றை முடித்து விடுகிறேன்”

“ஆனால் மேரி, நீ நீயாக இல்லையே. என்ன செய்து கொண்டிருந்தாய்?”

மேரி மூச்சு விடாமல் பதில் சொன்னாள், “கூட்டில் முட்டைகள் இல்லை. எனவே, கோழிகளின் புதிய இடத்தில் சென்று பார்க்க போனேன். நான் நடந்து போகும் போது வழியில் இருந்த மலைகளைக் கண்டதும் ஆபிரகாம் ஈசாக்கை பலியிட மோரியா மலைக்கு போனதும், கடைசி நிமிடத்தில் தேவன் ஒரு ஆட்டைக் கொடுத்ததும் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.”

உலறாத, மோலி தன் மகளின் பேச்சை இடை மறித்தாள். “ஆக, இது தான் இரகசியம். இப்போது புரிகிறது எனக்கு! நீ ஒரு வேதாகம கதையை யோசித்துக் கொண்டிருந்தாய் என்பதை நான் அறிந்திருக்க வேண்டும்.”

“ஆனால் அம்மா, பைபிளில் தானே எல்லா நல்ல கதைகளும் இருக்கிறது. அதை என்னால் வாசிக்க முடிந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்!” என்றாள் மேரி.

1790ம் ஆண்டில், திருமதி ஜோன்ஸ் நன்கு அறிந்திருந்தாள் தன் ஆறு வயதான மகள் வாசிக்கக் கற்றுக்கொள்வதும் வேதாகமம் ஒன்றை தனக்கே சொந்தமாய் வாங்குவதும் அரிதானது என்று. எனினும், தன் மகள் மனம் வருந்துவதை விரும்பாதவளாக, “ஓர் நாள் வரும் மேரி, அன்று உன்னால் முடியும்” என்றாள்.

மேரிக்கு எட்டு அல்லது ஒன்பது வயது இருக்கும். அவளது ஊரிலிருந்து இரண்டு மைல் தொலைவிலிருந்த ஒரு கிராமத்தில் ஒரு பாடசாலை திறக்கப்-பட்டுள்ளது என்ற செய்தியை தாய் சொல்லும் போது “என்னால் நம்ப முடியவில்லை அம்மா! தேவன் எனது ஜெபத்துக்கு கடைசியில் பதில் கொடுத்துவிட்டார். சீக்கிரமாகவே என்னால் பைபிளை வாசிக்க முடியும்.” என தன் சந்தோஷத்தைக் கட்டுப்படுத்த முடியாதவளாய் சொன்னாள் மேரி.

மேரியின் இளம் நம்பிக்கையைக் கண்டு சிரித்தவளாய் அவளது தாய், "புதிய பள்ளிக்கு இரண்டு மைல்கள் நடந்து போக வேண்டும். திரும்பி வரும் போதும் அதேயளவு நடக்க வேண்டும். உன்னால் முடியுமா மேரி?"

"ஓ அம்மா, நிச்சயமாகவே முடியும். எனக்கு பைபிள் வாசிக்க முடியுமாகும் என்றால் இரண்டு மைலுக்கும் மேலாக நடப்பேன். என்னால் காத்திருக்க முடியாது அம்மா, எப்போது பள்ளி ஆரம்பமாகும்?"

கேலியான தொனியில் "மூன்று வாரங்களில் ஆனால் நீ காத்திருக்க தான் வேண்டும்" என தாய் சொல்ல "அம்மா அது ஏன்" என கேட்டாள் மேரி.

"மேரி, நீ புரிந்து கொள்ள வேண்டும் வேதாகமம் வாங்குவதற்கு நமக்கு பணம் இல்லை. ஒவ்வொரு நாளுக்கும் தேவையான பணமும் நமக்கு கிடைப்பது கஷ்டமாக தான் உள்ளது. அதை தவிர, பைபிள்கள் அரிதாகவே இருக்கின்றன. அது விற்கப்படுவதை நான் கண்டதே இல்லை!" என தாய் கூறிய போதும் மேரி சற்றும் மனம் தளராமல் "அம்மா, எனக்கு புரிகிறது. ஆனால் ஆண்டவருக்கும் புரிகிறது. பைபிள் வாசிக்க வேண்டும் என நான் வெகு நாளாக ஜெபித்ததற்கு பதில் தான் புதிதாக ஆரம்பிக்கப்படும் பள்ளிகூடம். நான் வாசிக்க கற்றுக்-கொண்ட பின் பைபிள் ஒன்றை எப்படி பெற்றுக்கொள்வது என்பதையும் ஆண்டவர் காட்டுவார்" என்றாள்.

தன் மகளின் விசுவாசத்தைக் கண்டு வியந்தவளாய் தன் மகளை அணைத்துக்கொண்டு தலையில் முத்தஞ்செய்தாள். "சரியாக சொன்னாய் மேரி, நாம் ஒவ்வொரு நாளும் ஜெபித்து தேவனை நம்புவோம்" என்பதே தாயின் பதிலாயிற்று.

"இன்று எவ்வளவு சம்பாதித்தாய் மேரி?" வீட்டுக்குள் நுழைந்து பணப்பெட்டியிடம் போன தன் பதின்னான்கு வயதான மேரியிடம் கேட்டாள் மோலி. "இன்று சில சதங்கள் தான் அம்மா" என்றவள் உற்சாகத்துடன் சொன்னாள் "நாளைக்கு விற்பதற்கு முட்டைகள் கிடைக்கும், அடுத்த வாரம் ஆடை சலவை இருக்கிறது அம்மா!". மோலி மகளின் உற்சாகத்தைக்கண்டு சிரித்தாள்.

மேரி ஏற்கனவே சில வருடங்களாக சேமித்து வந்தாள். மற்ற சிறுவர்கள் விளையாடும் போது, மேரி பணம் பெறக்கூடி எல்லா வேலைகளையும் செய்தாள். "உன்னைப் பற்றி பெருமையடைகிறேன் மேரி. இத்தனை வருடமாகியும் நீ இன்னும் சேமிப்பதை விடவில்லை!" என்ற தாய்க்கு மேரி புன்னகையுடன் பதில் கூறினாள், "இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் எனக்கு தேவையான அளவு சேர்ந்துவிடும்."

நாள் வந்தது. "போதகர் ஐயா, போதகர் ஐயா" என பதினாறு வயதான மேரி சத்தமாக அழைத்துக்கொண்டு போதகரிடம் ஓடி வந்து "நான் அதை செய்து முடித்து விட்டேன்" என்றாள்.

“எதை செய்து முடித்தாயம்மா? வா இங்கே, அமைதியாக இங்கே உட்கார்ந்து நன்கு மூச்சுவிடு.”

“எனக்கே எனக்கு என்று ஒரு பைபிளை வாங்குவதற்கு தேவையான பணத்தைக் கடைசியில் சேர்த்து விட்டேன் ஐயா!, இங்கே எனக்கு ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாமா?”

“உனக்கே உனக்கென ஒரு வேதாகம்! ஏன், அது ஒரு சாதனை. ஆனால் இந்த பகுதியிலெங்குமே வேதாகமம் விற்பனைக்கு இல்லையே.” போதகர் மேரியின் கண்களைப் பார்த்தார். அது நம்பிக்கையால் ஒளிர்ந்தது. “பாலா” என்ற ஊரிலுள்ள திரு. சார்ல்ஸ் என்பவரிடம் நீ போக வேண்டும். அவரிடம் சில பைபிள்கள் இருக்கின்றன. ஆனால் நீ அங்கே போவதில் பயனில்லை மேரி, அவை சீக்கிரமாக விற்கப்பட்டுவிடும்!”

மேரி வீட்டுக்கு ஓடினாள் தன் தாயிடம் இந்த நல்ல செய்தியைச் சொல்ல. “பாலாவுக்கா? ஏன் மேரி? அது கிட்டதட்ட இருபத்தைந்து மைல்கள் தொலை-விலிருக்கிறது. நீ எப்படி அங்கே போவாய். உன்னால் தனியாக அங்கே நடந்து போக முடியாது!”.

“ஆண்டவர் என்னோடு வருவார் அம்மா, பைபிளுக்காக ஆறு வருடமாக வேலை செய்துள்ளேன். அதோடு பார்க்கும் போது ஐம்பது மைல்கள் போய் வருவது ஒன்றும் சிரமமில்லை!” மேரி தனியாக அங்கே போய் வருவதை தாய் எவ்வளவும் விரும்பாத போதிலும் அவளால் வேண்டாம் என சொல்ல முடியவில்லை. மேரி சொன்னது சரியே, ஆண்டவர் அவளுடன் போவார்.

ஆகவே, மறுநாள் அதிகாலை, பாலாவுக்கு செல்லும் நீண்ட நடை பயணத்தை ஆரம்பித்தாள். ஒவ்வொரு மைல் கடக்கும் போதும் அவள் பாதங்களின் வலியும் அதிகரித்தது. அவள் பைபிளை வாங்கும் போது தான் சிறந்த தோற்றத்துடன் இருக்க விரும்பியதால் வழியில் தன் காலணிகளை அணியாமல் வெறுங்காலிலேயே நடந்தாள். பாலாவுக்கு வந்தடைந்தவுடன், மேரி தன் சிவந்த, வீங்கிய கால்களிலே தன் காலணிகளை கவனமாக அணிந்து கொண்டாள்.

திரு. சார்ல்ஸ் அவர்கள் தன் வீட்டு முன் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு அதை திறக்க வந்தார். அங்கு, களைத்துப் போன, அழுக்குள்ள ஒரு சிறுமி தன் முகத்தில் பெரிய சிரிப்புடன் நின்றிருந்தாள். “ஐயா, என் பெயர் மேரி ஜோன்ஸ். உங்களிடம் பைபிள்கள் விற்பதற்கு உள்ளனவா?” மேரி கேட்டாள்.

“என்னிடமிருந்த கடைசி பைபிளை நான் வேறோருவருக்கு தருவதாக வாக்கு கொடுத்து விட்டேனே” என்றவர், மேரியின் கண்களிலிருந்து கண்ணீர் வருவதைக் கண்டு “ஏன் மகளே, என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்?” என்று கேட்டார்.

“மன்னித்துக்கொள்ளுங்கள் ஐயா, என்னால் அடக்கமுடியவில்லை. பைபிள் ஒன்றை வாங்குவதற்காக ஆறு வருடங்களாக நான் பணம் சேகரித்து, இன்று இருபத்தைந்து மைல் தூரம் நடந்து வந்துள்ளேன். ஆண்டவர் எனக்காக ஒன்றை வைத்திருந்திருப்பார் என நான் உறுதியாக நம்பினேன். இப்பொழுதோ எல்லாமே விற்கப்பட்டுவிட்டனவே!” என்றாள் மேரி.

உடனே திரு. சார்ஸ் யோசித்தார், மற்றவர்களுக்காக வேறு வேதாகமங்களை அவர் பிறகு பெற்றுக்கொள்ளலாம். ஆனாலும், பைபிளை வாங்குவதற்காக இவ்வளவு தியாகம் செய்த இந்த அற்புதமான சிறுமியை வெறுங்கையாய் போகவிட முடியாது.

“மேரி உன் கண்களைத் துடைத்துக்கொள். என்னிடம் மிகுதியாக இருக்கும் அந்த பைபிளை உனக்கு தருகிறேன்” என்றார். ஆனால், மேரியால் கண்ணீர் வருவதை நிறுத்த முடியவில்லை. சார்ல்ஸ் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் இன்னும் வேகமாய் அவள் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் புறப்பட்டது. தேவன் அவளது ஜெபத்தைக்கேட்டு அவள் மனம் விருப்பியதை அவளுக்கு கொடுத்தார். அநேக வருட உழைப்புக்கும் ஜெபத்துக்கும் பிறகு தனக்கே தனக்கென தனது மொழியிலேயே ஒரு வேதாகமத்தை அவள் சொந்தமாக்கிக்கொண்டாள்!

மேரியின் கதை அத்துடன் முடிந்துவிடவில்லை. அதிகளவான மக்கள் தங்களுக்கே என வேதாகமத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக, பிரித்தானிய மற்றும் வெளிநாட்டு வேதாகம சங்கம் 1804ல் ஆரம்பமாவதற்கு மேரியின் உதாரணமே ஏவுதலாய் அமைந்தது. அடுத்த 100 ஆண்டுகளில், 200 மில்லியன் வேதாகமங்களும் வேதாகம பகுதிகளும் அச்சங்கத்தால் விநியோகிக்கப்பட்டன. தற்போது உலகம் பூராகவும், இப்படிப்பட்ட அநேக வேதாகம சங்கங்கள் வேதாகமங்களை விநியோகித்து வருகின்றன.



# மெய்யான பக்திமான்

மெய்யான பக்திமானின் குணாதிசயங்கள் (கடந்த இதழின் தொடர்ச்சி)

**மனதுருக்கமுள்ள இருதயம்**

“அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்து போனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி,” மத்தேயு 9:36

இருளிலிருந்து அழிந்து போதும் மனுஷர்களுக்கு இயேசுகிறிஸ்துவானவர் பெரிய அளவில் அன்பு செலுத்தி மனதுருக்கத்தினால் எப்போதும் கிரியை செய்பவரானார்.

அநேக மனுஷர்கள் இயேசுவானவரைப்பற்றி அறியாது கவலையடைந்து வேதனைப்பட்டு பாவத்தில் வாழுகின்றப்போது அவர்களை நாம் நேசிக்கின்றோமா? இது நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வியாகும். இயேசு கிறிஸ்து உங்களுக்கு அருமையான இரட்சிப்பைக் கொடுத்திருப்பதோடு யாவருமே இரட்சிப்பை பெற்றுக் கொள்ளுவது தேவனுடைய விருப்பமாயிருக்கின்றது.

ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமை உள்ளவராயிருக்கிறார். 2 பேதுரு 3: 9

உலகில் வாழும் எல்லா மனுஷர்களும் தேவனுடைய இரட்சிப்பைப் பெறுவது தேவனுடைய சித்தமாய் இருக்கிறது. அவ்வாறே தேவனுடைய பெரிதான இரக்கத்தின் நிமித்தமாகவே எமக்கு இரட்சிப்பைப் பெற்றுக்கொடுத்து அவருடைய பிள்ளையாக எம்மை மாற்றியுள்ளார். இப்படியாக தேவனுடைய சித்தம் என்னவெனில், நாம் இவ்வுலகில் வாழுமளவும் அவருடைய இரட்சிப்பின் செய்தியை மனுஷர்கள் மத்தியில் கொண்டு செல்வதேயாகும். மனதுருக்கமான இருதயமுள்ளோர் பரிசுத்தாவியின் வழிநடத்துதலின் கீழ் தேவனுடைய இவ்வழைப்புக்கு கீழ்ப்படிவார்கள்.

தேவனுடைய பிள்ளையே! மனதுருக்கமான மனதுடன் அழிந்து போகும் மனுஷருக்கு தேவனை அறிமுகப்படுத்தி இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**கறைபடாத உலக ஜீவியம்**

தேவன் எம்மை அழைத்திருப்பது அசுத்தமான உலக காரியங்களினால் தீட்டுப்படுவதற்கு அல்ல. உலகிற்கு வெளிச்சமாக திகழ்வதற்கும், உலகில் கிரியை செய்யும் பிசாசின் வல்லமையை இயேசு கிறிஸ்துவின் மூலமாக உடைத்து எறிவதற்குமே தேவன் எம்மை அழைத்துள்ளார்.

**ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான். 2தீமோத்தேயு 2:21**

ஆகையால், தேவனது நாமத்தை தரித்திருக்கிற நாம் யாவரும் எம்மில் காணப்படுகிற அநீதிகளை விட்டுவிட்டு இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான இரத்தத்தினாலே எம்மைக் கழுவி சுத்திகரித்துக்கொள்வோம்.

நாம் எந்நேரமும் உலகத்தில் கறைபடாது , தேவனால் பாவிப்பதற்கு ஏற்ற பாத்திரமாக இருக்க அவசியமாய் இருக்கிறது. எனினும், ஏதோ ஒரு காரணத்தின் நிமித்தமாக நாம் பாவத்தில் விழுந்தோமானால், நாம் எமது பாவங்களை தேவனிடம் அறிக்கையிட்டு மெய்யாக மனஸ்தாபப்படுவோமானால், அதற்கூடாக, தேவன் எம்மை மன்னித்து எம்மை நீதிமானாக மாற்றுவார். இப்படியாக எம் வாழ்நாளில் எல்லா நன்மையான வேலைகளுக்கும், ஆயத்தமான, தேவனின் கனத்துக்குரிய பாத்திரமாக எம்மை நியமிப்பதற்கு தேவனுக்கு முடியுமாயிருக்கும்.

தீட்டான நாம் யாவரும் முன்மாதிரியான பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதின் முக்கியத்துவத்திற்காக, உலகின் தீட்டானவைகளிலிருக்கும் பயங்கரத்தை மிகவும் தெளிவான முறையில் கற்பிக்கின்ற ஓர் வசனத்தை உங்கள் முன் வைக்கின்றேன்.

தேவனுடைய பிள்ளைகள் உலகின் அசுத்தங்களுக்கு (பாவங்கள்) சிக்கிக்கொள்வதின் பயங்கரத்தை தேவ வசனம் நமக்குக் கற்பிப்பதோடு தேவனுடைய இந்த சத்தியத்தை புறக்கணியாதீர்கள்.

**கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற**
**இயேசு கிறிஸ்துவை அறிகிற**
**அறிவினாலே உலகத்தின்**
**அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள்**
**மறுபடியும் அவைகளில்**
**சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால்,**
**அவர்களது பின்னிலைமை**
**முன்னிலைமையிலும் கேடுள்ளதாய்**
**இருக்கும். அவர்கள் நீதியின்**
**மார்க்கத்தை அறிந்த பின்பு**
**தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட**
**பரிசுத்த கற்பனையை விட்டு**
**விலகுவதைப்பார்க்கிலும்**
**அதை அறியாதிருந்தார்களானால்**
**அவர்களுக்கு நலமாயிருக்கும்.**
**2 பேதுரு 2: 20,21**

கடைசியாக எம்மை நாமே கேட்டுக் கொள்ளகூடிய 3 கேள்விகளை உங்கள் முன்னிலையில் நான் வைக்கிறேன்.

01. உமது நாவு கட்டுப்படுத்தப்பட்டு உள்ளதா?

02. மற்றவர்களின் வேதனை இயலாமையை புரிந்துக் கொண்ட மனதுருக்கமான (தயவுள்ள) இருதயம் உமக்கு உண்டா?

03. உலகின் மனுஷர்கள் (காரியாலயம், அயலாளர், உறவினர்) பரிசுத்த வாழ்வை வாழ்வதற்கு நித்தமும் முயற்சிக்கின்ற ஒருவராக உம்மைக் காண்கின்றனரா?

-சகோ. ரமேஷ்-

# கோராகின் புத்திரரோ சாகவில்லை

எண்ணாகமம் 26: 11

கோராகு என்பவன், அவனது கதையை அறிந்த ஒவ்வொருவனது மனதையும் கதிகலங்கச்செய்யும் ஒருவனாவான்.

மனித வரலாற்றிலேயே படு பயங்கரமாக அழிவடைந்தவன் என்றால் அது மிகை-யாகாது என நினைக்கிறேன். ஏனோக்கு மற்றும் எலியா என்பவர்கள் மரணத்தைக் காணாமல் உயிரோடே தேவனிடம் சென்றவர்கள் என்பதினாலே பிரசித்-தமானவர்கள். ஆனால் கோராகோ, உயிரோடே பாதாளத்தில் இறங்கியவ-னாவான்.

கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவும் சபை-யாரின் முன் நின்று அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யவும் தம்மிடத்தில் சேரப்-பண்ணும்படி இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து பிரித்-தெடுக்கப்பட்டவனும் தேவனிடத்தில் சேரப்பண்ணப்பட்டவனுமாகிய இவன் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன்,

ஆனால் அதை அற்ப காரியமாய் எண்ணி, ஆசாரியப்பட்டத்தையும் தேடி, கர்த்தருக்கு விரோதமாக போராட்டம் பண்ணி, தேவன் நியமித்திருந்த ஒழுங்குக்கும் தலைமைத்துவத்துக்கும் எதிராக தன் மனதிலே தீய எண்ணங்-கொண்டான். தனக்கு துணையாக, ஆராதனை ஊழியத்துடன் தொடர்பு படாத ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்த, சபையில் பேர் பெற்றவர்களாயிருந்த தாத்தானையும் அபிராமையும் ஓனையும் கூட்டிக்கொண்டு எதிர்த்துப்பேசின பாவத்துக்குள்ளாகி கெட்டுப்போனான்.

அவனது இந்த பாவத்தினாலே, சகல மனிதரும் சாகிறபடி சாவாமல், சகல மனிதருக்கும் நேரிடுகிறது போல நேராமல் கர்த்தரே மோசேசை அனுப்-பினார் என அறிந்துகொள்ளும்படி, கர்த்தர் ஒரு புதிய காரியத்தைச்-செய்து, கோராகுக்குரிய எல்லா மனிதரோடும் அவர்களுக்கு உண்டான சகல பொருள்களோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கும்படி நிலம் பிளந்து, பூமி தன் வாயைத்திறந்து அவனை விழுங்கிப்போட்டது.

என்ன ஒரு விபரீதம்! எவ்வளவு பயங்-கரமான அழிவு! ஈரக்குலை உருகிப்-போகும் சம்பவம்! இந்த சம்பவத்திலே கோராகுடன் இணைந்த தாத்தான், அபிராம் என்பவர்களும் அவர்கள் பெண்ஜாதிகள் குழந்தைகளோடும் கோராகின் எல்லா மனிதர்களும் அழிந்து போனார்கள். இவர்களுடன் இணைந்து தூபங்காட்டின 250 பேரையும் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு வந்த அக்கினி பட்சித்துப்-போட்டது.

இவ்வளவு கோர நிலைக்குள்ளான

கோராவின் குமாரரைக் குறித்தோ எண்ணாகமம் 26: 11இலே கோராகின் குமாரரோ சாகவில்லை என தெள்ளத்தெளிவாகவும் குறிப்பிட்டும் சொல்லப்பட்டுள்ளதென்றால் இதை வாசிக்கும் என் அருமையானவர்களே, இது நாம் சிந்திப்பதற்கான நேரமல்லவா? நாம் உணர்வடைவதற்கான வாய்ப்பல்லவா?

சபையிலே பேர்பெற்றவர்களாயிருந்த தாத்தான் அபிராம் என்பவர்களையே தனக்கு கூட்டாளிகளாக்கிக்கொண்டு, கர்த்தர் தெரிந்துகொண்டவர்களுக்கு விரோதமாக சபையையெல்லாம் கூடி வரச்செய்தவனாகிய இந்த கோராகின் குமாரரோ தன் தகப்பனுடைய பாவத்துக்கு உடன்படாமல் கர்த்தர் பட்சம் சார்ந்திருந்திருந்தார்கள் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

தங்கள் தந்தைக்கு தங்கள் மீது இருந்த செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் கண்டு பயந்து அவர்களது பாவத்துக்கு இணங்கி உடன்படாமல் துணிச்சலுடனே கர்த்தர் பட்சம் சார்ந்திருந்தவர்கள் இவர்கள். நமக்கு இந்த துணிச்சல் இருக்கிறதா எனக்கு அன்பான வாசகர்களே!

நம் நண்பர்களாலோ, நலன் விரும்பிகளாலோ, நம் குடும்பத்தாராலோ, நமக்கு நெருங்கினவர்களாலோ, நம்மை நேசிக்கிறவர்களாலோ, நாம் நேசிக்கிறவர்களாலோ, நம் மீது நேரடி அதிகாரமுடையவர்களாலோ எவராலென்றாலும் கர்த்தருக்கு விரோதமாய் செயற்படுவதற்கு நம் மீது எந்தளவு செல்வாக்கு செலுத்தப்பட்டாலும் அவ்வாறு நாம் தூண்டப்படும் போது, நம் மீது செல்வாக்கு, அதிகாரம், ஆதிக்கம் செலுத்தப்படும் போது நாம் தெரிந்து கொள்வது, நாம் நிற்கப்போவது யாருடைய பட்சத்தில்? யாருக்காக நாம் எழுந்து நிற்கப்போகிறோம்?

ஆம், நாமும் எதிர்த்து நிற்க வேண்டும் என் சகோதரரே, நாம் எதிர்த்து நிற்க வேண்டும். கோராகைப் போல கர்த்தருக்கு விரோதமாக அல்ல, ஆனால் கோராகின் புத்திரரைப் போல பாவத்துக்கே விரோதமாக நாம் எதிர்த்து நிற்க வேண்டும்.

பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே. மரணம் நேரிடுகிறதாய் இருந்தாலும் அதற்குத் தப்பும் படி எங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் எங்கள் சாட்சியின் வசனத்தினாலும் நாம் தைரியமாய் கர்த்தருக்காக உறுதியாய் நின்று ஜெயிக்க வேண்டும்.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என நம் தலைவர், நம் ஆண்டவர், நம் கர்த்தர், நம்மை முற்றும் முடிய இரட்சிக்கிறவர், நம்மை வழுவாதபடி காக்கிறவர், நம்மைத் தம்முடைய மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே மாசற்றவர்-

களாய் நிறுத்த வல்லமையுள்ளவர், தாம் ஒருவரே ஞானமுள்ளவராகிய நம்முடைய இரட்சகரான தேவன் சொல்லியிருக்கிறார்.

எனவே, எங்கள் மகா பரிசுத்தமான விசுவாத்தின் மேல் எங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி தேவனுடைய அன்பிலே நம்மைக் காத்துக்கொண்டு நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தைப் பெறக்காத்திருப்போம். மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத்தள்ளுவோம்.

இப்படிப்பட்ட கோராகின் புத்திரர் பிற்காலத்திலே, சபையிலே தாவீது ராஜாவாலும் அவன் குமாரனாகிய சாலொமோன் எனும் ராஜாவாலும் கர்த்தருடைய ஆலயத்திலே பாடகராக சங்கீத சேவனையுடன் பணிவிடை செய்து வந்தார்கள். சங்கீதப்புத்தகத்திலிருக்கும் சங்கீதங்களில் குறைந்த பட்சம் 11 சங்கீதங்கள் கோராகின் புத்திரரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்:

எண் 16,
எண் 26,
யூதா புத்தகம்,
எபி 12: 4,
வெளி 12: 11,
யோவான் 16: 33,
1 நாளாகமம் 6: 33 - 37

-S. வரபிரசாத்-

• • • • • • • • • • • • • • • • • • • • • • •

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ........................................................................................

**முகவரி:** ........................................................................................


........................................................................................

........................................................................................

**ஒப்பம்:** ........................................................................................

# ஜீவ ஒளி

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.




மேலதிக விபரங்களுக்கு:

Jeeva Oli

Christian Fellowship Centre

7, Vivekananda Road, Wellawatte,

Colombo 6.

Tel: 2581901

www.christianfellowshipcentre.com